(1) அறிவிப்புகள்— தொடர்ச்சி.

(ஈ) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு நிதி ஒதுக்க (செலவினக் கணக்கின் மீது வாக்கெடுப்பு) மசோதா.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ் நாடு 1971-ம் ஆண்டு நிதி ஒதுக்க (செலவினக் கணக்கின் மீது வாக்கெடுப்பு) மசோதாவை அறிமுகம் செய்வதற்கும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்வதற்கும் ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

(2) அரசினர் மசோதாக்கள்.

(இ) தமிழ் நாடு 1971-ம் ஆண்டு நிதி ஒதுக்க (செலவினக் கணக்கின் மீது பொது விவதாம்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவரவர்களே, தமிழ் நாடு 1971-ம் ஆண்டு நிதி ஒதுக்க (செலவினக் கணக்கின் மீது வாக்கெடுப்பு) மசோதாவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இம் மசோதாவை இப் பேரவைமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இம் மசோதா அறிமுகப் படுத்தப்பட்டிருக்கிறது.

(6) 1970-71-ம் ஆண்டிற்கான இறுதித் துணை நிதி நிலை அறிக்கை மீது பொது விவாதம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த விவாதத்தையும் முடித்துக்கொண்டு வாக்கெடுப்பும் ஒன்றரை மணிக்குள் நடைபெற வேண்டி இருப்பதால், உறுப்பினர்கள் சுருக்கமாகப் பேசலாம் என்ற வகையில் முதலில் திரு. க. சுப்பு அவர்களைப் பேசுமாறு அழைக்கிறேன்.

*** திரு. க. சுப்பு :** மாண்புமிகு சட்டபேரவைத் தலைவர் அவர்களே, இந்த துணை மானியக் கோரிக்கையில் ஒதுக்கப்பட்டி ருக்கும் ஒருசில கோரிக்கைகளைப்பற்றி மட்டும் வலியுறுத்திப் பேச விரும்புகிறேன்.

இதில் ஒன்றாவது கோரிக்கையாக இருக்கும் லான்ட் ரெவின்யூ துறைக்கு 42,71,100 ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. சர்வே, செட்டில்மெண்ட் துறைகளில் நியமிக்கப்பட்டவர்கள் அவர்கள் வேலை முடிந்த பிறகு வீட்டிற்கு அனுப்பக்கூடிய நிலைமை இருக் கிறது. அப்படிப்பட்ட அச்சம் அவர்களுக்கு இருக்கிறது. ஆகவே, சர்வே, செட்டில்மெண்ட் துறைகளில் வேலை பார்த்து வருபவர்கள், அந்த வேலை முடிந்துவிட்டாலும், அந்தத் துறை